# பாடம் 34 & 35: திருப்பலி

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

அடிப்படை நிலை (8 வயது) : அனைத்து கருத்துகளையும் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (11 வயது) : அனைத்து கருத்துகளையும் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (14 வயது) : அனைத்து கருத்துகளையும் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

கடந்த சில பாடங்களில், அருளடையாளங்கள் குறித்து நாம் கற்று வருகிறோம். இதுவரை, முதல் மூன்று அருளடையாளங்களை நாம் கண்டுள்ளோம்: திருமுழுக்கு, உறுதிபூசுதல், மற்றும் நற்கருணை. இந்த மூன்று அருளடையாளங்களும் ஒருசேர, புகுநிலை அருளடையாளங்கள் என்று அறியப்படுகின்றன. இன்னுமாக, திருப்பலியில் (திருச்சபையின் பொது வழிபாடாக அது இருக்கிறது) அப்பம் மற்றும் திராட்சை ரசத்தின் மீது குரு செபிக்கிற வேளையில் நற்கருணை உருவாகிறது. ஆகவே, திருப்பலியில் என்ன நிகழ்கிறது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியமானது. ஒரு கத்தோலிக்கராக உங்கள் வாழ்வு முழுவதும் நீங்கள் விடாது பங்கேற்க வேண்டியத் திருப்பலி குறித்து, இந்த பாடத்தில் நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. கத்தோலிக்கத் திருச்சபையின் வாழ்வில் மைய வழிபாட்டுச் செயலாகத் திருப்பலி இருக்கிறது.

2. திருப்பலியில், கிறிஸ்து தமது மணவாட்டியான திருச்சபையோடு தம்மை ஒன்றிணைக்கிறார், வார்த்தை மற்றும் நற்கருணை வழியாகத் தம்மையே அவளுக்கு உணவாக அளிக்கிறார்.

3. திருப்பலியானது உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் ஆட்டுக்குட்டியாக இயேசுவை பலி செலுத்துவதாகவும் இருக்கிறது. ஒவ்வொரு திருப்பலியிலும் இயேசு மீண்டும் கொல்லப் படுகிறார் என்பது இதன் பொருளன்று. சிலுவை மீது அவரது பலி எல்லாருக்குமாக ஒரேமுறை ஏற்கெனவே நிகழ்ந்துவிட்டது (எபி 10:10). எனினும், எல்லாருக்குமாக ஒரேமுறை நிகழ்ந்த அவரது பலியின் விளைவு இடைவிடாததாக இருக்கிறது, மேலும் ஒவ்வொரு திருப்பலியிலும் அது திரும்பத்திரும்பச் செலுத்தப்படுகிறது. நாம் திருப்பலி கொண்டாடுகையில், இயேசு பெரிய தலைமை குருவாக இருந்து, தந்தையின் முன்பாகத் தம்மையே கடவுளின் ஆட்டுக்குட்டியாகக் கையளிக்கிறார்.

4. குருவாக இருக்கின்ற நபரில் கிறிஸ்து தாமே செயல்படுவதாகவும் திருப்பலி இருக்கிறது. ஒரு குரு தமது திருநிலைப்பாட்டில் கிறிஸ்துவுக்குள் வடிவாக்கப்படுகின்றார், அவர் அருளடையாளங்களைக் கொண்டாடும் பொழுது, கிறிஸ்து என்ற நபரில் அவர் அதைச் செய்கிறார். இதன் காரணமாகவே, திருப்பலியில் வார்த்தையிலும் நற்கருணையிலும் கிறிஸ்து தம்மை அளிக்கிறது போன்று, ஒரு திருப்பணியாளரும் நற்செய்தியை அறிவித்து, போதித்து, வசீகர செபத்தை நடத்துகிறார். குருவின் கரங்களால் புளிக்காத அப்பமும் திராட்சை ரசமும் கிறிஸ்துவின் உடலாகவும் குருதியாகவும் மாறுகின்றன.

5. திருப்பலியானது பின்வரும் பகுதிகளால் உருவாக்கப்பட்டுள்ளது:
அ) தொடக்கச் சடங்குகள்
ஆ) வார்த்தை வழிபாடு
இ) நற்கருணை வழிபாடு
ஈ) முடிவுச் சடங்கு
திருப்பலியின் ஒவ்வொரு பகுதியிலும் என்ன நிகழ்கிறது என்று அறிவது முக்கியமானது.

**அ) தொடக்கச் சடங்குகள்**

திருப்பவனி மற்றும் வருகைப் பாடல் (அல்லது நுழைவு முன்மொழி)

- பீட உதவியாளர்கள் மற்றும் திருத்தொண்டரோடு (ஒருவர் இருந்தால்) குரு நுழைகிறார்.
- இந்த திருப்பவனியின் பொழுது, வழமையாக, வருகைப் பாடல் பாடப்படுகிறது. திருவழிபாட்டு பருவத்திற்குப் பொருத்தமான பாசுரம் பாடுவதும் அனுமதிக்கப்பட்டதே.

• “மக்கள் ஒன்றுகூடியப் பிறகு, திருத்தொண்டர் மற்றும் திருப்பணியாளர்களோடு குரு நுழையும் போது வருகைப் பாடல் தொடங்குகிறது. இந்தப் பாடலின் நோக்கம் கொண்டாட்டத்தைத் தொடங்குவதும், கூடிக்கிறவர்களின் ஒற்றுமையை வளர்ப்பதும், திருவழிபாட்டு பருவம் அல்லது விழாவின் மறைபொருளுக்கு தங்களது சிந்தனைகளைத் திறப்பதும், குரு மற்றும் திருப்பணியாளர்களின் பவனியோடு இணைந்திருப்பதும் ஆகும்.” (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 47).

• “நுழைவின்போது பாடல் இல்லையெனில், விசுவாசிகளில் ஒருவர், அல்லது வாசகரால் திருப்பலி நூலில் உள்ள முன்மொழி வாசிக்கப்பட வேண்டும்; மற்றபடி, குரு தாமே அதை வாசிக்கிறார், அவர் அதைத் தமது அறிமுக விளக்கவுரையாகவும் ஆக்கிக் கொள்ளலாம்.” (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 48).

பலிபீடத்தை வணங்குதல்

• பலிபீடமானது கிறிஸ்துவையும் அவரது தூயப் பலியையும் சுட்டிக்காட்டுகிறது, ஆகவே நாம் அதை முத்தமிடுவதன் வழியாக அவருக்கான நமது ஆராதனையைக் காட்டுகிறோம்.

• பலிபீடமானது திருச்சபையின் புனிதர்களையும் சுட்டிக்காட்டுகிறது, அவர்களுக்கு நமது வணக்கத்தை நாம் செலுத்துகிறோம், அவர்களும் நமது நற்கருணை கொண்டாட்டத்தின் பகுதியாக இருக்கிறார்கள்.

பலிபீடத்திற்குத் தூபமிடுதல்

• கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கிறப் பலிபீடத்திற்கு சாம்பிராணி புகையால் தூபமிடுவது செபம்நிறை வணக்கத்தைக் காட்டுவதாகும். பீடத்தைச் சுற்றிவந்து, நறுமணப் புகையிடும் தூபக்கலனை அசைப்பதன் வழியாக இது செய்யப்படுகிறது. பலிபீடத்தோடு கூடுதலாக, திருச்சிலுவைக்கும் சாம்பிராணி தூபமிடப்படுகிறது.

• நமக்கு, சாம்பிராணி என்பது மன்றாட்டின் அடையாளமாக இருக்கிறது.

- “ஆண்டவரே என் மன்றாட்டு தூபம்போல் உம் முன்பாக எழுவதாக!” (திபா 141:2)

- “அச்சாம்பிராணி புகை வானதூதரின் கையில் இருந்து, புனிதர்களின் செபங்களோடு கடவுள் முன்பாக எழும்பிச் சென்றது.” (திவெ 8:4)

• சாம்பிராணி பயன்படுத்துவது தெரிவுக்குரியது, கொண்டாடுநரின் விருப்பத்திற்கேற்ப அது பயன்படுத்தப்பட்டாலும், அது சிறப்பு தருணங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. “தேவைப்படும் தருணத்தின் பொழுது” அது பயன்படுத்தப்பட வேண்டும் என்று *ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 49 குறிப்பிடுகிறது.

• பலிபீடத்திற்குத் தூபமிட்டதும், கொண்டாடுநர் (அருள்பணியாளர்) தமது தலைமை இருக்கைக்குச் செல்கிறார்.

கொண்டாடுநர் இருக்கைக்குச் செல்தல்

• இந்த இருக்கை அதிகாரநிலை மற்றும் அலுவலின் அடையாளமாகவும், கற்பிக்கும் அதிகாரத்தின் அடையாளமாகவும் இருக்கிறது. இயேசு கற்பித்தபோது வழக்கமாக அவர் அமர்ந்திருந்தார் என்று மறைநூல் பதிவு செய்கிறது (மத் 5:1; லூக் 4:20; மாற் 13:3; யோவா 8:2).

• தற்போது ஆயரின் இருக்கை சிறப்பாக இந்த பொருளோடு பொருந்தியுள்ளது மேலும் குருவின் இருக்கை தல வழமருக்கு கீழ்ப்பட்டதாக மட்டுமே இருக்கிறது. கற்பிப்பதற்காக ஆயர் தமது இருக்கையில் அமர, பல ஆயர்கள் அதை நடைமுறையாக்காமல் இருந்தாலும், அனுமதிக்கப்பட்டுள்ளார்.

• அதிக நவீன விதத்தில், இந்த இருக்கையானது குருவின் தலைமையேற்கும் வகிநிலையை அடையாளப்படுத்துகிறது. “கொண்டாடுநர் குருவின் இருக்கை, கூடியுள்ளோருக்குத் தலைமையேற்கும் மற்றும் செபத்தை நடத்தும் தமது அலுவலையும் குறித்துக்காட்ட வேண்டும். ... எனினும், அரியணையின் தோற்றம் தவிர்க்கப்பட வேண்டும்.” (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 310)

• இந்த மூன்று வகிநிலைகளும் (ஆளுதல், கற்பித்தல், மற்றும் தலைமையேற்றல்) மெய்யாக கிறிஸ்துவையே சுட்டுகின்றன. குரு, தமது திருநிலைப்பாட்டின் வழியாக, கிறிஸ்துவில் வடிவாக்கப் பெற்று *பெர்சோனா கிறிஸ்தியாக* (கிறிஸ்து என்ற நபராக) செயல்படுகிறார்.

சிலுவை அடையாளம்

• இருக்கையின் இடத்தில் நின்று, கொண்டாடுநர் சிலுவை அடையாளத்தோடு திருப்பலியைத் தொடங்குகிறார்.

• இந்த சைகையின் தோற்றம் கிறிஸ்தவத்தின் தொடக்க நாட்களுக்குப் பின்னோக்கிச் செல்கிறது, ஒருவரது நெற்றியில் சிலுவை அடையாளம் வரைவதில் இருந்து வந்திருக்கலாம்.

• அழிவிலிருந்து மீட்கப்பட இருந்தோர் தங்களது நெற்றியில் *தாவ்* அல்லது "T" குறியிடப் பெற்றிருந்தனர் (விப 17:9-14; எசே 9:4; திவெ 7:3, 9:4, 14:1) என்ற மறைநூல் குறிப்பில் இருந்து இந்த பழக்கம் உருவாகியிருக்கலாம்.

• "தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே" என்ற வாய்பாடு, கடவுள் ஒருவரே என்பதை அறிவிக்கிறது, ஆகவே ஒரே பெயர், ஆனால் ஒரே கடவுளில் மூன்று ஆள்கள் இருக்கின்றனர்.

• சிலுவை அடையாளத்தின்போது, "அலகைகள் நடுங்குகின்றன, வானதூதர் அதை உய்த்துணர்கின்றனர். முன்னவை தப்பியோடுகின்றன, அதேநேரம் பின்னவர்கள் தங்களுக்கு உரியதைப் போன்று அதனிடம் ஒன்றுகூடுகின்றனர்" என்று புனித சிரில் கூறுகின்றார் (அவரது *மறைக்கல்வி விரிவுரைகளில்* இருந்து).

கொண்டாடுநரின் வாழ்த்து

• கூடியுள்ள மக்களை பின்வரும் விதங்களில் ஏதோவென்றால் கொண்டாடுநர் வாழ்த்துகிறார்:

1. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.
2. நம் தந்தையாம் கடவுள் மற்றும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் அமைதியும் உங்களோடு இருப்பதாக.
3. ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.
4. அமைதி உங்களோடு இருப்பதாக (ஆயர்கள் மட்டுமே இந்த வாழ்த்தைப் பயன்படுத்தலாம்).

• எந்த வாழ்த்தானாலும் மக்களின் பதிலிறுப்பு: "உம் ஆவியோடும் இருப்பதாக" (அல்லது இருப்பாராக). இந்த சொல்லாடலை திருநிலைப்பாடு பெற்றத் திருப்பணியாளரிடம் மட்டுமே கூற முடியும். இங்குள்ள "ஆவி" என்பது அந்த திருப்பணியாளர் திருநிலைப்பாட்டில் பெற்ற ஆவியின் கொடையைக் குறிக்கிறது என்று சில அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர்.

• "மக்களை வாழ்த்தியப் பிறகு, குரு... அன்றைய நாளின் திருப்பலி குறித்தச் சுருக்கமான அறிமுகத்தை வழங்கலாம்." (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 50)

மனத்துயர் சடங்கு

• மனத்துயர் சடங்கு மூன்று வேறுபட்ட வடிவங்களைப் பெற்றிருக்கலாம்:

அ) *கொன்பித்தோர்* அல்லது "நான் ஒப்புக்கொள்கிறேன்" (ஏற்றுக்கொள்கிறேன்);

ஆ) கொண்டாடுநர் மற்றும் மக்களுக்கு இடையிலான உரையாடல் (பொதுவாகப் பயன்பாட்டில் இல்லை);

இ) *கீரியே* (ஆண்டவரே இரக்கமாயிரும்) மன்றாட்டு (புனித நீருக்கு ஆசியளித்து, தெளிக்கும் சடங்கு, உயிர்ப்பு காலத்தில் பயன்படுத்துவது சிறந்தது).

• இந்த மூன்று வடிவங்களுமே நான்கு பகுதியுள்ள ஒரே படியுருவைப் பின்பற்றுகின்றன: (1) விசுவாசிகளுக்கு குருவின் அழைப்பு, (2) அமைதிக்கான ஓர் இடைவெளி, (3) மன்றாட்டு, மற்றும் (4) குரு அளிக்கும் மன்னிப்பு.

• மனத்துயர் சடங்கின் முதல் இரண்டு வடிவங்கள் பயன்படுத்தப்பட்டால், மன்னிப்புக்குப் பிறகு, தொடர்ந்து *கீரியே* (ஆண்டவரே இரக்கமாயிரும், கிறிஸ்துவே இரக்கமாயிரும், ஆண்டவரே இரக்கமாயிரும்) வரவேண்டும்.

• "இந்த சடங்கு குருவின் மன்னிப்போடு நிறைவடைகிறது, எவ்வாறெனினும், இது ஒப்புரவு அருளடையாளத்தின் பயனில் குறைவுபடுகிறது." (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 51)

உன்னதங்களிலே

• ஞாயிறு மற்றும் சிறப்பு விழா திருப்பலிகளில், அடுத்ததாக மிகப் பழமையான வணக்கமுறு பாசுரமாகிய *க்ளோரியா* என்று அழைக்கப்படும் (உன்னதங்களிலே) புகழ்ச்சி திருச்சபையால் பாடப்படுகிறது (அல்லது கூறப்படுகிறது). திருவருகைக்காலம் மற்றும் தவக்காலத்திற்கு புறம்பான ஞாயிற்றுக்கிழமைகளிலும், பெருவிழாக்கள், விழாக்கள் மற்றும் சிறப்பு, ஆடம்பரக் கொண்டாட்டங்களிலும் இது பாடப்படுகிறது.

• *க்ளோரியா* புகழ்ச்சியின் வரிகள் கிறிஸ்து பிறப்பில் வானதூதர்கள் பாடியப் பாடலை எதிரொலிக்கிறது, சாத்தியமானால் இது பாடப்பட வேண்டும்.

• “இந்த பாசுரத்தின் வரிகள் வேறு எந்த வரிகளாலும் மாற்றப்படக் கூடாது.” (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 53)

தொடக்க மன்றாட்டு (திரட்டு)

• தற்போது குரு, “மன்றாடுவோமாக!” என்று கூறுகிறார். இந்த மன்றாட்டு மரபில் “திரட்டு” (லத்தீனில், கொல்லெக்டா) என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் தொடக்க மன்றாட்டுகள் எல்லாவற்றையும், நாம் கொணர்ந்துள்ள மற்றத் தனிப்பட்ட விண்ணப்பங்களையும் ஒரே பொழிப்பு மன்றாட்டாகத் திரட்டிக் கூறுவதே இதன் நோக்கம்.

• “எல்லாரும், குருவோடு ஒருசேர, ஒரு சிறிய அமைதியைக் கடைபிடிக்கின்றனர், தாங்கள் கடவுளின் நிகழ்மையில் இருக்கின்றனர் என்பதை அவர்கள் உணர்ந்து, மனதிற்குள் தங்களது விண்ணப்பங்களை ஏறெடுக்கின்றனர்.” (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 54)

• மக்கள் இந்த திரட்டுக்கு தங்களது “ஆமெனால்” ஒப்புதல் அளிக்கின்றனர்.

அவையோர் அமர்கின்றனர்

• அமர்தல் என்பது கற்பிக்கும் தோரணையாக இருக்கிற நேரத்தில், அது மக்களின் கற்கும் தோரணையாகவும் இருக்கிறது.

## ஆ) வார்த்தை வழிபாடு

மறைநூல் வாசகங்கள்

• வார்த்தை வழிபாடு பழைய ஏற்பாட்டு வாசகத்துடன் தொடங்குகிறது, தொடர்ந்து ஒரு திருப்பாடலில் இருந்து பதிலுரைப் பாடல் வருகிறது, பிறகு புதிய ஏற்பாட்டுத் திருமுகத்தில் இருந்து ஒரு வாசகமும், இறுதியாக நற்செய்திகளில் இருந்து ஒரு வாசகமும் இடம் பெறுகின்றன.

• வாசக நூல் ஞாயிறு திருப்பலிகளுக்கு மூன்றாண்டு சுழற்சியையும் (ஆண்டுகள் அ, ஆ, இ), வாரநாள் திருப்பலிகளுக்கு ஈராண்டு சுழற்சியையும் (சுழற்சி 1 மற்றும் 2) வழங்குகிறது.

• பதிலுரைத் திருப்பாடல் ஒரு தனிச்சிறப்புடன் திருவழிபாட்டின் ஒருங்கிணைந்தப் பகுதியாக இருக்கிறது. அது ஒரு பக்தியுள்ள தியானக் கணமாக, நம்பிக்கையாளர்களின் இதயங்களில் பெறப்பட்டுள்ள இறைவார்த்தைக்குப் பிறகான பாடல்வரிகளின் அக்களிப்பாக இருக்கிறது.

• “மரபின்படி, வாசகங்களை வாசிப்பது தலைமையேற்பு சார்ந்ததாக அன்றி, திருப்பணி சார்ந்த செயலாக இருக்கிறது. இந்த வாசகங்கள், ஆகவே, ஒரு வாசகரால், (நற்செய்தியானது திருத்தொண்டர் அல்லது, அவர் இல்லாதபோது, கொண்டாடுநர் அல்லாத மற்றொரு குருவால்) வாசிக்கப்பட வேண்டும். நிறுவப்பட்ட வாசகர் இல்லாதபோது, மறைநூல் வாசகங்களை மற்றப் பொதுநிலையினர் வாசிக்கப் பணிக்கப்படலாம். அவர்கள் இச்செயலைச் செய்ய உண்மையில் பொருத்தமானவர்களாக, கவனமுள்ளத் தயாரிப்பு பெற்றவர்களாக இருக்க வேண்டும், அதனால் இந்த மறைநூல் வாசகங்களுக்குச் செவிமடுக்கும் விசுவாசிகள் தங்கள் இதயங்களில், புனித மறைநூலுக்கான இதமான உயிருள்ள அன்பை வளர்த்துக் கொள்வர். (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 59)

• “வார்த்தை வழிபாட்டின் பொழுது, சிறு அமைதி காலத்தைப் புகுத்துவதும் பொருத்தமானது... எடுத்துக்காட்டாக, வார்த்தை வழிபாடு தொடங்குவதற்கு முன்பும், முதல் மற்றும் இரண்டாம் வாசகங்களுக்குப் பின்பும், இறுதியாக மறையுரையின் முடிவிலும், அத்தகைய அமைதியைக் கடைபிடிப்பது பொருத்தமாக இருக்கும்.” (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 56)

• இறைவார்த்தையின் மாண்புக்கு, வார்த்தையை அறிவிக்கப் பொருத்தமான, வார்த்தை வழிபாட்டின் பொழுது விசுவாசிகளின் அவை முழுவதும் திரும்பி கவனிக்கத் தகுந்த ஓர் இடத்தை திருச்சபை கோருகிறது. இந்த இடம் வழமையாக நிலையான, எளிதில் நகர்த்த முடியாத வாசகமேடையாக இருப்பது பொருத்தமானது. திருநிலை திருப்பணியாளர்களும் மற்ற வாசகர்களும் தெளிவாகத் தெரிகின்ற மற்றும் விசுவாசிகளால் கேட்கப்படுகின்ற விதத்திலான இடத்தில் ஆலயத்தின் வாசகமேடை இருக்க வேண்டும். வாசகமேடையில் இருந்து மட்டுமே வாசகங்கள், பதிலுரை திருப்பாடல், மற்றும் உயிர்ப்பின் ஆர்ப்பரிப்பு (எக்சுல்தேத்) ஆகியவை எடுத்துரைக்கப்பட வேண்டும்; மறையுரை வழங்கவும், விசுவாசிகளின் மன்றாட்டை வாசிக்கவும் அது பயன்படுத்தப்படலாம். வார்த்தையின் திருப்பணியாளர் மட்டுமே அதனிடம் செல்லும் விதமாக, வாசகமேடைக்கு மாண்பு தேவையாகிறது.” (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 309)

மறையுரை

• மறையுரை அருள்பணியாளரில் ஒருவரால் போதிக்கப்பட வேண்டும்.

• ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் கடன் திருநாட்களில் அவையோரோடு (மக்கள் குழுமத்தோடு) கொண்டாடப்படும் எல்லா திருப்பலிகளிலும் மறையுரை தேவையாகிறது; தீவிர காரணம் இருந்தாலன்றி இதைத் தவிர்க்கக்கூடாது.

• "...வாசகங்களை விளக்குவதும் அதை இக்காலத்துக்குப் பொருத்தமாக ஆக்குவதுமே மறையுரையின் நோக்கமாகும். இது குருவின் அலுவலாக இருக்கிறது. விசுவாசிகளின் கருத்துரைகள் அல்லது அவர்களுடனான உரையாடல் அல்லது அதையொத்த எதுவும் மறையுரையில் இடம்பெறக் கூடாது." (திருவழிபாட்டு அறிவுறுத்தல்கள் #3, 2)

நம்புகை

• மறையுரைக்கு பதிலிறுக்கும் விதமாக, அவையோர் திருச்சபையின் நம்புகையைச் சொல்லி, தங்களது விசுவாசத்தை அறிக்கையிடுகின்றனர்.

• நாம் திருப்பலியில் சொல்கின்ற அல்லது பாடுகின்ற நிசேயா-கொன்ஸ்தாந்திநோபிள் நம்புகை, நிசேயா (கி.பி. 325) மற்றும் கொன்ஸ்தாந்திநோபிள் (கி.பி. 381) சங்கங்களில் எடுத்துரைக்கப் பெற்று, கால்செதோன் (கி.பி. 451) சங்கம் பின்னுறுதி செய்த விசுவாசப் பொழிப்பாகும்.

• கிறிஸ்தவ விசுவாசத்தின் உள்ளடக்கங்களை வெளியாக்குவதே இந்த நம்புகையின் நோக்கம்.

• இயேசுவின் உடலேற்புக்கு மரியாதை அளிக்க, "இவர் தூய ஆவியால் கன்னி மரியாவிடம் உடலெடுத்து மனிதரானார்" என்ற வாக்கியத்திற்கு நாம் குனிந்து தலைவணங்குகிறோம். இந்த உடலேற்பைக் கொண்டாடும் கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு மற்றும் கிறிஸ்து பிறப்பு ஆகிய விழாக்களின் பொழுது, இந்த வாக்கியத்திற்கு உண்மையில் நாம் முழந்தாளிடுகிறோம்.

விசுவாசிகளின் மன்றாட்டு (பொது பரிந்துரை)

• "விசுவாசிகளின் மன்றாட்டில், மக்கள் ஒரு குறிப்பிட்ட விதத்தில் அவர்கள் விசுவாசத்தில் வரவேற்ற இறைவார்த்தைக்குப் பதிலிறுக்கின்றனர், மேலும் அவர்களின் திருமுழுக்கு சார்ந்த குருத்துவ அலுவலைச் செயலாக்குகின்றனர், எல்லாரின் மீட்புக்காக கடவுளிடம் மன்றாட்டை எழுப்புகின்றனர். அவையோரோடு கொண்டாடப்படும் திருப்பலிகளில், விதிப்படி, அத்தகைய ஒரு மன்றாட்டைப் புகுத்துவது பொருத்தமானது, அதனால் தூய திருச்சபைக்காக, குடிமை அதிகாரிகளுக்காக, பல்வேறு தேவைகளால் ஏங்குவோருக்காக, எல்லா ஆண்கள் மற்றும் பெண்களுக்காக, மற்றும் உலகம் முழுவதன் மீட்புக்காக விண்ணப்பங்கள் ஏறெடுக்கப்படும். விதிப்படி பின்வரும் கருத்துகளுக்காக செபிக்க வேண்டும்:
திருச்சபையின் தேவைகளுக்காக;
பொது அதிகாரிகள் மற்றும் உலகம் முழுவதன் மீட்புக்காக;
எவ்விதமான இடையூறாலும் பாதிக்கப்பட்டோருக்காக;
தலக் குழுமத்திற்காக.

இருப்பினும், உறுதிபூசுதல், திருமணம், அல்லது இறுதிச்சடங்கு போன்ற குறிப்பிட்டக் கொண்டாட்டங்களில், அந்த குறிப்பிட்டத் தருணத்திற்கு நெருக்கமாக விண்ணப்பங்கள் இடம்பெற வேண்டும்.

இந்த மன்றாட்டை கொண்டாடுநர் குரு இருக்கையில் இருந்து நடத்த வேண்டும். அவரே இதை ஒரு சுருக்கமான அறிமுகத்தால் தொடங்குகிறார், அதன் வழியாக விசுவாசிகளை மன்றாட அழைக்கிறார், அவ்வாறே அவர் ஒரு மன்றாட்டால் இதை நிறைவு செய்கிறார். சொல்லப்படும் கருத்துகள் மயக்கமற்றவையாக, சுதந்திரமாகவும் முன்மதியோடும் தொகுக்கப்பட்டவையாக, செறிவானவையாக இருக்க வேண்டும், மேலும் அவை குழுமம் முழுவதன் மன்றாட்டாக வெளிப்பட வேண்டும்." (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 69-71)

• திருத்தொண்டர் இருந்தால், அவர் அந்த கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும். மற்றபடி, திருப்பலியில் பங்கேற்கும் ஒரு பொதுநிலையினர் எடுத்துரைக்கலாம்.

**இ) நற்கருணை வழிபாடு**

• இறைவார்த்தையைப் போன்று முக்கியமானதும் மதிப்புமிக்கதும், அதனால் சுட்டப்படுவதுமாக இருக்கிறது: நற்கருணை வழிபாடு. வார்த்தை ஊனாகி நம்மிடையே குடிகொண்டார், தற்போது நாம் கேட்டுள்ள வார்த்தை, இயேசு கிறிஸ்து, நாம் பெறுகின்ற ஊனாகவும் குருதியாகவும் ஆவார்.

• இறுதி இரவுணவில் கிறிஸ்து பாஸ்கா பலியையும் உணவையும் நிறுவினார். கிறிஸ்துவைக் குறித்துக்காட்டுகின்ற குரு, ஆண்டவர் செய்ததையும் தமது நினைவாகத் தமது சீடர்கள் செய்யுமாறு கட்டளையிட்டதையும் நடத்தும் பொழுது, இந்த உணவில் சிலுவைப் பலி தொடர்ந்து திருச்சபையில் நிகழ்மைப்படுகிறது.
• கிறிஸ்துவின் வார்த்தைகள் மற்றும் செயல்களுக்கு ஏற்ப, நற்கருணை வழிபாட்டுக் கொண்டாட்டத்தைத் திருச்சபை ஏற்பாடு செய்துள்ளது.
• முற்காலத்தில், நற்கருணை வழிபாடு ‘‘விசுவாசிகளின் திரள்வு’’ என்று அழைக்கப்பட்டது.

பலிபீடத்தைத் தயாரித்தல்
• பலிபீடம் தயாரிக்கப்படுகிறது, காணிக்கைகள் முன்னே கொணரப்பட்டு வழங்கப்படுகிறது.
• பலிபீடத்தைத் தயாரிக்கும்போது நீங்கள் கவனிக்க வேண்டிய முக்கியப் பொருள்களாவன:
பலிபீடம்
உடற்றுகில்
துடையல்
ரசக்கிண்ணம்
ரோமைத் திருப்பலி நூல்

காணிக்கைகள் மீது மன்றாட்டு
• பலிபீடத்தின் தயாரிப்பு முடிந்ததும், குரு காணிக்கைகள் மீது சத்தமாக அல்லது மெதுவாக மன்றாடுவார். *கடவுள் இந்த அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் ஏற்றுக்கொண்டு, அதைப் புனிதப்படுத்தி தூயதாக்க வேண்டும் என்பதே இந்த மன்றாட்டின் சிறப்பான நோக்கம்.*
• குரு சத்தமாக மன்றாடினால், இந்த மன்றாட்டின் இரண்டு பகுதிகளில் ஒவ்வொன்றுக்குப் பிறகும், ‘‘இறைவன் என்றென்றும் வாழ்த்தப் பெறுவாராக!’’ என்று அவையோர் பதிலிறுக்கின்றனர்.

காணிக்கைகளுக்குத் தூபமிடுதல்
• தற்போது மீண்டும் தூபம் கொணரப்படுகிறது. ஏற்கெனவே நாம் கற்றுள்ளது போன்று, பல பங்குதளங்களில் மிகவும் முக்கியத் தருணங்களில் மட்டுமே தூபம் பயன்படுத்தப்படுகிறது.
• ‘‘என் மன்றாட்டு தூபம்போல் உம் முன்பாக எழுவதாக, மாலை காணிக்கை போல் என் என் கைகள் உயர்வனவாக!’’ (திபா 141:2) என திருப்பாடலில் நாம் காண்பது போன்று, தூபம் என்பது மன்றாட்டின் அடையாளமாக இருக்கிறதை நினைவுக்கு கொணர்வோம்.

குரு தமது கைகளைக் கழுவுகிறார்
• இத்தருணத்தில் சிறப்பியல்பான ஒன்று நிகழ்கிறது: குரு தமது கைகளைக் கழுவுகிறார்.
• குரு தமது கைகளைக் கழுவும் பொழுது, ‘‘ஆண்டவரே எனது குற்றங்களைக் கழுவிப் போக்கியருளும், எனது பாவங்களில் இருந்து என்னைத் தூய்மையாக்கும்’’ என்று அமைதியில் கூறுகிறார்.

மன்றாட அழைப்பு
• அடுத்து, குரு அவையோரை மன்றாட அழைக்கிறார்: ‘‘சகோதர சகோதரிகளே, என்னுடையதும் உங்களுடையதுமான இப்பலியை, எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுள் ஏற்றுக்கொள்ள மன்றாடுங்கள்’’, அதற்கு அவையோர், ‘‘ஆண்டவர் தமது திருப்பெயரின் புகழ்ச்சிக்காகவும் மாட்சிக்காகவும், நமது நன்மைக்காகவும், தமது தூய திருச்சபை அனைத்தின் நலனுக்காகவும், இப்பலியை உமது கையினின்று ஏற்றுக்கொள்வாராக’’ என்று பதிலிறுக்கின்றனர்.

முகவுரை உரையாடலும், முகவுரையும்
• தற்போது திருப்பலி நற்கருணை மன்றாட்டுக்குள் நுழைகிறது, இது நன்றிகூறல் மற்றும் புனிதப்படுத்தலின் மன்றாட்டாகும். இதுவே திருப்பலி முழுவதன் மையமாகவும் உச்சப் புள்ளியாகவும் இருக்கிறது.
• காணிக்கை மீதான மன்றாட்டுக்குச் சற்றுப் பிறகு *சாங்துஸ்* (தூயவர்) பாடுவதற்கு முன்பு, இது ஒரு சிறிய உரையாடலுடன் தொடங்குகிறது. இந்த தொடக்கம் ‘‘முகவுரை உரையாடல்’’ என்று அழைக்கப்படுகிறது, மெய்யாக தனது பரந்தப் பார்வையிலும் விண்ணக அழைப்பிலும் இது தனிச்சிறப்பானது.

• “ஆண்டவர் உங்களோடு இருப்பாராக” என்ற சொற்களால் மக்களை வாழ்த்துவதில், கடவுளின் ஆவியின் இயக்கச் செயல்பாடு இறைமக்களுக்கு வழங்கப்பட வேண்டும், கடவுள் அவர்களிடம் ஒப்படைத்த உலகை உருமாற்றும் வேலையைச் செய்வதற்கு அவர்களை இயல்வாக்க வேண்டும் என்றத் தமது ஆவலை குரு வெளிப்படுத்துகிறார். “உம் ஆவியோடும் இருப்பாராக” என்றச் சொல்லாடலை திருநிலைப்பாடு பெற்றத் திருப்பணியாளரிடம் மட்டுமே கூற முடியும்.

• கொண்டாடுநர் பிறகு, “உங்கள் இதயங்களை எழுப்புங்கள்!” என்கிறார், அதற்கு அவையோர் “ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்!” என்று பதிலிறுக்கின்றனர். ஆண்டவரில் நம்மை வாழ்த்தியப் பிறகு, அவர் நம்மை விண்ணகத்திற்குச் செல்ல அழைக்கிறார்! கொண்டாடுநரின் வழியாக, விண்ணகத்தில் உள்ள நித்தியப் பலிபீடத்திற்குச் செல்லுமாறு நம்மை அழைக்கிறார், அங்கு நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒரே நேரத்தில் தலைமை குருவாகவும் பலிப்பொருளாகவும் இருந்து தம்மைக் கையளிக்கிறார்.

• முகவுரையின் உரைமம் பருவம் அல்லது அந்நாளின் புனிதர் அல்லது விழா அடிப்படையில் மாறுகிறது. ஆனால் அது எப்பொழுதும் இவ்வாறு ஒரே விதத்தில் முடிகிறது: “ஆகவே, வானதூதர்கள் மற்றும் தலைமை வானதூதர்களோடும், அரியணையில் அமர்வோர் மற்றும் தலைமை தாங்குவோரோடும், மற்றும் எல்லா விண்ணக அணிகள் மற்றும் ஆற்றல்களோடும் சேர்ந்து, நாங்கள் உமது மாட்சியைப் புகழ்ந்து பாடி, முடிவின்றிச் சொல்வதாவது: தூயவர், தூயவர், தூயவர்...” இவ்வாறு நமது வழிபாடு விண்ணகத் திருவழிபாட்டுக்குள் பெறப்பட்டு, இந்த மாட்சிமிகு புகழ்ச்சி செயலில் எண்ணற்ற வானதூதர்கள் மற்றும் புனிதர்களோடு நமது குரல்களும் இணைகின்றன என்பதை நாம் நினைவில் கொணர்கிறோம்.

முகவுரை ஆர்ப்பரிப்பு (தூயவர், தூயவர் அல்லது *சாங்துஸ்*)

• முகவுரை வழக்கமாக வழிபடுவோரின் புகழ்ச்சி வானதூதர்களோடு இணைவதை விவரிக்கும் சொற்களோடு முடிகிறது, அவர்களே “தூயவர், தூயவர்” அல்லது *சாங்துஸ்* என்கின்றச் சொற்களால் கடவுளைப் புகழ்வதாகக் காட்டப்படுகின்றனர். கொண்டாடுநர் எஞ்சிய நற்கருணை மன்றாட்டைத் தொடர்வதற்கு முன்பு, இந்த *சாங்துஸ்* குருவோடு ஒருசேர அவையோரால் சொல்ல அல்லது பாடப்படுகிறது.

• நாம் *சாங்துஸ்-ஐ* தொடங்கும் பொழுது, நாம் சாதாரணமாக அதை மட்டும் சொல்வதில்லை. நாம் காலத்திற்கு வெளியே சென்று, ஒரு மறைபொருளான விதத்தில் விண்ணகத்தோடு ஒன்றிக்கிறோம், ஏனெனில் விண்ணக அணிகள் இதே பாடலைப் பாடுகின்றன.

நற்கருணை மன்றாட்டு

• முகவுரை உரையாடல் மற்றும் முகவுரை ஆர்ப்பரிப்புக்குப் பிறகு, வேறுபட்ட பல நற்கருணை மன்றாட்டுகளில் இருந்து ஒன்றை குரு தேர்ந்தெடுக்கிறார். சில மற்றவற்றை விட நீண்டவை, ஆனால் ஒவ்வொன்றும் ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்டுள்ளன, மேலும் பின்வரும் இரண்டு கூறுகளை உள்ளடக்கியுள்ளன:

1) *எப்பிக்லேசிஸ்* (தமிழில், “வேண்டல்”): அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் கிறிஸ்துவின் உடலாகவும் குருதியாகவும் மாற்றத் தூய ஆவியாரை அனுப்புமாறு தந்தையாகிய கடவுளை நாம் வேண்டுகிறோம்.

2) நிறுவல் மற்றும் வசீகரம்: இறுதி இரவுணவில் இயேசு நற்கருணையை நிறுவியதை நாம் இங்கு நினைவில் கொணர்கிறோம். வசீகரச் சொற்கள், இயேசுவின் செயல், மற்றும் தூய ஆவியாரின் வல்லமை வழியாக, அப்பமும் திராட்சை ரசமும் கிறிஸ்துவின் உடலாகவும் குருதியாகவும் மாறுகின்றன.

நினைவு ஆர்ப்பரிப்பு

• அடுத்து, மக்கள் நினைவு ஆர்ப்பரிப்பை அறிவிக்கத் தூண்டுமாறு, குரு இவ்வாறு கூறுகிறார்: “விசுவாசத்தின் மறைபொருள்” அல்லது லத்தீனில் *மிஸ்தீரியும் பீதெய்.*

• இந்த நினைவு ஆர்ப்பரிப்பு என்பது நற்கருணையின் நிறுவல் நிகழுரைக்குப் பிறகு மக்களால் சொல்லப்படும் அல்லது பாடப்படும் ஆர்ப்பரிப்பாகும். முற்கால கிழக்கத்திய வழிபாடுகளில் இது பொதுவாக இருந்தது, அண்மையில் 1969ல் இருந்து லத்தீன் ரீதியில் அறிமுகம் செய்யப்பட்டது.

• இங்கு, நாம் விசுவாசத்தின் மறைபொருளை அறிவிக்கிறோம்: கிரேக்கத்தில் *மிஸ்தேரியோன்* (மறைபொருள்) என்ற சொல், “அருளடையாளம்” என்ற தமிழ் சொல்லுக்கு நிகரானது. தூய நற்கருணையானது மாபெரும் மறைபொருளாக, அல்லது விசுவாசத்தின் அருளடையாளமாக

இருக்கிறது, ஏனெனில் நற்கருணையில், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மெய்யாகவே நிகழ்மைப்பட்டுள்ளார்: உடல், குருதி, ஆன்மா, மற்றும் இறைத்தன்மையோடு.

• கொண்டாடுநரின் தூண்டலுக்குப் பதிலிறுப்பாக அவையோர் தேர்ந்தெடுப்பதற்கு இங்கு மூன்று ஆர்ப்பரிப்புகள் இருக்கின்றன. எவ்வாறெனினும், மூன்று ஆர்ப்பரிப்புகளும் இறப்பு (மூன்றாம் ஆர்ப்பரிப்பில், இயேசுவின் இறப்பைச் சுட்டுவதற்கு ‘‘சிலுவை’’ பயன்படுத்தப்படுகிறது) மற்றும் உயிர்ப்பைக் குறிப்பிடுகின்றன.

புகழுரையும் பெரிய ஆமெனும்

• அடுத்து என்ன நிகழ்கிறது என்றால், குரு புகழுரை பாடல் முழுவதும் கிறிஸ்துவின் உடல் மற்றும் குருதியைத் தூக்கிப் பிடிக்கின்றார். திருவழிபாட்டில் திருத்தொண்டர் இருந்தால், குரு கிறிஸ்துவின் உடலையும், திருத்தொண்டர் கிறிஸ்துவின் குருதியையும் பிடித்திருக்கின்றனர்.

• இது கடவுளுக்கு நாம் மாட்சியும் மரியாதையும் செலுத்தும் தருணமாகும், நம்மிடையே அறிந்துணரக் கூடியவராக அவர் வந்துள்ளார்: கிறிஸ்துவின் உடல் மற்றும் குருதியில். இந்த பறைசாற்றலைத் தங்களுடையதாக்கிக் கொள்ளும் வகையில், விசுவாசிகள் ‘‘ஆமென்’’ என்று பாடுகின்றனர்.

• தம்மையே நம்மோடு ஒன்றிக்க நாடும் மூவொரு கடவுளைப் புகழ்கின்ற, மாட்சிப்படுத்துகின்ற, மரியாதை செலுத்துகின்ற நமது வழியாக புகழுரைகள் இருக்கின்றன.

• புகழுரையைத் தொடரும் ஆமெனானது ‘‘பெரிய ஆமென்’’ என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் இந்த புகழுரையோடு உற்சாகமாக இணங்குகின்ற நமது வழியாக இருக்கிறது.

ஆண்டவரின் செபம்

• இந்நேரத்தில், ஆண்டவரின் செபத்தை தம்மோடு சொல்லுமாறு அல்லது பாடுமாறு எல்லா விசுவாசிகளையும் குரு அழைக்கிறார். ‘‘மீட்பரின் கட்டளையால் கற்பிக்கப்பட்டு, இறை படிப்பினையால் பயிற்சி பெற்ற, நாம் துணிந்து கூறுவோம்’’ என்று அவர் கூற, ‘‘விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே’’ என்று கொண்டாடுநரோடு இணைந்து மக்கள் செபிக்கத் தொடங்குகின்றனர்.

• கத்தோலிக்கத் திருச்சபையில் கொண்டாடப்படும் ஒவ்வொரு திருப்பலியிலும் ஆண்டவரின் செபம் செபிக்கப்படுவதற்கும் மிக வெளிப்படையான காரணம், இந்த செபம் இயேசுவால் தமது திருத்தூதர்களுக்கு கையளிக்கப்பட்டு, அவர்கள் வழியாக நம்மை வந்தடைந்தது என்பதே. இதன் காரணமாக, இச்செபம் கிறிஸ்தவர்களிடம் நன்கறியப்பட்ட செபமாக இருக்கிறது.

• திருப்பலியில் இச்செபம் திருவிருந்துக்குச் சற்று முன்பாக வைக்கப்பட்டுள்ளது இயல்பானதே, ஏனெனில் இது அன்றாட உணவு, கிறிஸ்தவர்களுக்கு, நம் ஆண்டவரின் உடலும் குருதியும் என்றும் பொருள்படும், மற்றும் பாவ மன்னிப்புக்கான விண்ணப்பமாக இருக்கிறது, அதனால் தூயது தூயோருக்கு வழங்கப்படும்.

• ஆண்டவரின் செபத்தின் முடிவில் குரு மட்டும் ‘‘*எம்போலீஸ்முஸ்*’’ என்று அழைக்கப்படும் மன்றாட்டைச் சேர்க்கிறார். லத்தீனில், *எம்போலீஸ்முஸ்* என்பது ஒரு விதமானச் செருகலைச் சுட்டுகிறது. ஏனென்றால் ஆண்டவரின் செபத்திற்கும், ‘‘ஏனெனில் ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கு உரியதே’’ என்றப் புகழுரைக்கும் இடையில் இந்த மன்றாட்டு செருகப்பட்டுள்ளது.

• ஆண்டவரின் செபத்தின் பொழுது கைகளை உயர்த்துவது குறித்து: திருப்பலியில் மன்றாடும் பொழுது கைகளை விரிப்பது (*ஓரான்ஸ்* எனப்படும் தோரணை) குருவுக்கு மட்டுமே உரிய சைகை என்பதை பல கத்தோலிக்கர் அறிந்திருக்கவில்லை.

• ஆண்டவரின் செபத்தின் பொழுது கைகளைச் கோர்ப்பது குறித்து: இறை வழிபாட்டுப் பேராயம் நிலையாக இவ்வாறு கற்பித்துள்ளது, ‘‘ஆண்டவரின் செபத்தைச் சொல்லும்போது கைகளைக் கோர்த்துப் பிடிப்பது பொதுவாக இடம்பெறுகிறது, ஆனால் அது திருவழிபாட்டில் விதிமீறலானச் சேர்க்கை. கைகளைக் கோர்த்தல் நெருக்கத்தின் குறியீடாகும் அது ஒப்புரவின் குறியீடன்று, அத்தகையவை, கிறிஸ்து மற்றும் நமக்கு அடுத்திருப்பவரோடு நெருக்கத்தின் அருளடையாளக் குறியீடான திருவிருந்துக்கு இட்டுச்செல்லும் திருப்பலியில் அருளடையாளக் குறியீடுகளின் ஓட்டத்தைத் தடுக்கின்றன’’ (‘‘நொத்திச்சே’’, 1975, இறை வழிபாட்டுக்கானப் புனித பேராயம், வத்திக்கான், தொகுதி 11, ப. 226).

சமாதான அடையாளம் (தெரிவுக்குரியது)

• ‘‘[ஆண்டவரின் செபம் மற்றும் ‘‘ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, ‘என் சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்’ என்று உமது திருத்தூதர்களுக்கு மொழிந்தீரே...’’ என்ற

மன்றாட்டைத்] தொடர்ந்து வரும் சமாதானச் சடங்கின் வழியாகத் திருச்சபை தனக்கும், மனிதக் குடும்பம் முழுவதற்கும் சமாதானத்தையும் ஒற்றுமையையும் கேட்கிறது, மேலும் விசுவாசிகள் நற்கருணையில் பங்குகொள்ளும் முன்பாக, ஒருவர் மற்றவருடன் திருச்சபைசார் ஒன்றிப்பையும் ஊடிடைப் பிறரன்பையும் வெளிப்படுத்துகின்றனர். மக்களின் பண்பாடுகள் மற்றும் வழக்கங்களுக்கு ஏற்ப ஆயர் பேரவைகளால் நிறுவப்பட்ட முறையில், சமாதான அடையாளம் வழங்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், ஒவ்வொரு நபரும் தங்களுக்கு மிக அருகில் உள்ளவர்களுக்கு, அமைதியான முறையில் சமாதான அடையாளத்தை வழங்குவதே பொருத்தமானது. (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 82)

• ரோமைத் திருப்பலி நூலிலேயே காணப்படுகின்ற இது தொடர்பான மற்ற அறிவுறுத்தல்கள் (#128, #129), சமாதானப் பரிமாற்றம் பகிரப்படுவதைச் சுட்டிக் காட்டுகின்றன, ''பொருத்தமாக அமைந்தால்'' கொண்டாடுநர் ''திருத்தொண்டர் அல்லது திருப்பணியாளருக்கு சமாதான அடையாளம் வழங்குகிறார்''.

• ''குரு சமாதான அடையாளத்தை திருப்பணியாளர்களுக்கு வழங்கலாம் ஆனால் எப்பொழுதும் தூயகத்திற்குள்ளே இருக்க வேண்டும், அதனால் கொண்டாட்டம் கெடாதிருக்கும்'' (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 154). (குறிப்பு: சில அரிய விதிவிலக்குகளும் இருக்கின்றன, ஆனால் அவற்றுக்குள் நாம் விரிவாகச் செல்லப் போவதில்லை.)

அப்பம் பிடுதல் (உலகின் பாவம் போக்கும்)

• சமாதானப் பரிமாற்றத்தைத் தொடர்ந்து உடனடியாக, ''உலகின் பாவம் போக்கும்'' அல்லது ஆக்னஸ் தேயி (இறைவனின் செம்மறி) சொல்ல அல்லது பாடப்படுகிறது.

• ''குரு நற்கருணை அப்பத்தைப் பிட்கிறார், தேவை ஏற்படின், கூட்டுகொண்டாடுநர் அல்லது திருத்தொண்டர் அதற்கு உதவுகிறார். இறுதி இரவுணவில் அப்பத்தைப் பிட்ட கிறிஸ்துவின் சைகை, இந்த முழு நற்கருணைச் செயல்பாடே திருத்தூதர்கள் காலத்தில் இதன் பெயரை வழங்கியது, உலகின் மீட்புக்காக இறந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவான வாழ்வளிக்கும் அப்பத்தில் இருந்து திருவிருந்தைப் பெறுவதன் வழியாக, பல விசுவாசிகள் ஒரே உடலாய் ஆக்கப்படுகின்றனர் என்பதைக் குறித்துக் காட்டுகிறது (1கொரி 10:17). அப்பம் பிடுதல் அல்லது உடைத்தலானது சமாதான அடையாளத்துக்குப் பிறகு தொடங்குகிறது, மேலும் அது தகுந்த மரியாதையோடும் செய்யப்படுகிறது, ஆயினும் அது தேவையின்றி நீட்டிக்கப்படவோ, அதற்குத் தேவையற்ற முக்கியத்துவம் கொடுக்கப்படவோ கூடாது. இந்த சடங்கு குரு மற்றும் திருத்தொண்டருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. குரு அப்பத்தைப் பிட்டு, அதன் ஒரு துண்டை ரசக் கிண்ணத்திற்குள் போடுவது மீட்பு பணியில் ஆண்டவரின் உடல் மற்றும் குருதியின் ஒன்றிப்பை குறித்துக் காட்டுகிறது, அது இயேசு கிறிஸ்துவின் உயிருள்ள மாட்சிமிகு உடலாகும்.'' (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 83)

• திருப்பலியில் பயன்படுத்தும் நற்கருணை அப்பம் பற்றி பேசுகையில், நாம் இவ்வாறு அறிவுறுத்தப்படுகிறோம்: அது ''அவையோரோடு திருப்பலி நிகழ்த்தும் குருவால் பகுதிகளாகப் பிட்கப்பட்டு, அவற்றில் சிலவற்றை விசுவாசிகளோடு பகிர்ந்தளிக்க இயலுகின்ற விதத்தில் ஆக்கப்பட வேண்டும். சிறிய அப்பங்கள் திருவிருந்து பெறுவோரின் எண்ணிக்கைக்கும் மற்ற மேய்ப்புசார் தேவைகளுக்கும் குறைவுபடாத வகையில் இருக்க வேண்டும். திருத்தூதர்கள் காலத்தில் நற்கருணைக்கு பெயர் வழங்கிய அப்பம் பிடுதல் அல்லது உடைத்தல் செயல், ஒரே அப்பத்தில் எல்லாரும் பங்குகொள்ளும் ஒற்றுமையின் குறியீடு, மற்றும் சகோதர சகோதரிகள் நடுவே ஒரே அப்பம் பகிர்ந்தளிக்கப்படும் உண்மை வழியாக பிறரன்பு குறியீடு ஆகியவற்றின் சக்தியையும் முக்கியத்துவத்தையும் மிகத் தெளிவாக வெளிக்கொணர்கிறது. (*ரோமைத் திருப்பலி நூலின் பொது அறிவுறுத்தல்*, 321)

• குரு புனித அப்பத்தை பிட்கும் பொழுது, அவர் அதன் ஒரு சிறியத் துண்டை ரசக் கிண்ணத்திலும் போடுகிறார், அது கலத்தல் என்று அழைக்கப்படுகிறது. இந்த கலத்தலானது கிறிஸ்துவின் உடலும் குருதியும் அவரது மாட்சிமிகு உயிர்த்தெழுதலில், விண்ணகத்திலும் நற்கருணையிலும் மீண்டும் ஒன்றித்துள்ளதைக் குறித்துக் காட்டுகிறது.

• கொண்டாடுநர் கிறிஸ்துவின் உடலையும் குருதியையும் உயர்த்தும் பொழுது, ''இதோ இறைவனின் செம்மறி, இவரே உலகின் பாவங்களைப் போக்குகிறவர். இந்த செம்மறியின் விருந்துக்கு அழைக்கப்பட்டோர் பேறுபெற்றோர்'' என்று கூறுகிறார், இது திருவெளிப்பாடு 19:9ல் விண்ணகத் திருமண விருந்துக்கான வானதூதரின் அழைப்பை எதிரொலிக்கிறது.

• இந்த அழைப்புக்கு பதிலிறுப்பாக அவையோர், ''ஆண்டவரே, நீர் என் இல்லத்திற்கு வர நான் தகுதியற்றவன் (தகுதியற்றவள்), ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும், எனது ஆன்மா நலமடையும்''. மத்தேயு 8:8ல் தமது வீட்டுக்கு வராமலே தமது பணியாளரை இயேசு ஒரு வார்த்தையாலே நலமாக்குவார் என்று விசுவாசம் கொண்டிருந்த ரோமை நூற்றுவர்

தலைவர் கதையை இந்த சொற்கள் நினைவூட்டுகின்றன. திருப்பலியில் நடைபெறுகின்ற நலமாக்கல், நூற்றுவர் தலைவரின் பணியாளருக்கு நிகழ்ந்த உடல்சார் நலமாக்கலை விட மிகவும் மேலானது. நற்கருணை வழியாக, ஆன்மா – நமது இருப்பின் கரு – நலமடைகிறது.

திருவிருந்து

• திருமுழுக்கு பெற்று கத்தோலிக்கத் திருச்சபையோடு முழு ஒன்றிப்பில் உள்ளவர்களில், முதல் திருவிருந்து பெற்று, அருள் நிலையில் இருக்கிற மக்களே திருவிருந்தைப் பெறலாம். அவர்கள் திருவிருந்தைப் பெறுவதற்கு குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்பு எந்த உணவும் உண்டிருக்கக் கூடாது (தண்ணீர் மற்றும் மருந்து இதில் அடங்காது).

• ஒரு நபர் சாவானப் பாவம் செய்ததாக அறிந்திருந்தால், அவர் திருவிருந்தைப் பெறுவதற்கு முன்பு, அதாவது திருப்பலி தொடங்கும் முன்பே, ஒப்புரவு அருளடையாளம் பெற வேண்டும்.

• நாம் ஆண்டுக்கு ஒரு முறையாவது (உயிர்ப்பு காலத்தில்) நற்கருணை பெற வேண்டும். நாம் ஒரு நாளில் இரண்டு முறை நற்கருணை பெறலாம், இரண்டாம் முறை பெறுவதற்கு முழு திருப்பலியில் பங்கேற்றிருக்க வேண்டும்.

• திருவிருந்து பெற்றப் பிறகு, நீங்கள் இயேசுவோடு தனியாகவும், புனித அமைதியில் நெருங்கிய செபத்திலும் நேரத்தைச் செலவிட வேண்டும்.

**ஈ) முடிவுச் சடங்கு**

• திருப்பலி குறிப்பிட்ட மன்றாட்டுகளோடு தொடங்குவது போன்றே, அது அதே பாணியில் முடிவுறுகிறது. இம்மன்றாட்டைத் தொடர்ந்து கொண்டாடுநரால் இறுதி ஆசி வழங்கப்படுகிறது. இறுதி ஆசிக்கு முன்பாக சில சுருக்கமான அறிவிப்புகள் இடம்பெறலாம்.

• இறுதி ஆசிக்குப் பிறகு, அவையோர் கலைந்து செல்கின்றனர். கொண்டாடுநர் (அல்லது திருத்தொண்டர் இருந்தால், அவர்), ‘‘அமைதியில் செல்லுங்கள்’’ என்று கூற, ‘‘இறைவனுக்கு நன்றி’’ என்று அவையோர் பதிலிறுக்கின்றனர்.

• இந்த கலைதல் லத்தீனில் *மிஸ்ஸா* என்று அழைக்கப்படுகிறது. இதிலிருந்தே மாஸ் என்ற ஆங்கிலப் பெயர் வந்தது.